**+2 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு மார்ச் - 2025**

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (அ) மோடம் | (ஆ) நிதிகளை திரட்டுவதற்கு |
| 2. ஆ)நிதிகளை திரட்டுவதற்கு | (ஆ) வணிக வங்கி |
| 3. (அ) திட்டமிடுதல் | (ஆ) பரஸ்பர நிதிகள் |
| 4. (ஈ) மும்பை | (இ) மாவட்ட நீதிபதி |
| 5. (ஆ) பரஸ்பர நிதிகள் | (அ) கலை மற்றும் அறிவியல் |
| 6. (ஈ) 1992 | (ஈ) கரடி |
| 7. (அ) ரால்ப் நாடர் | ஈ) புறவளங்கள் |
| 8. (அ) வணிக இரசீது சந்தை | (ஈ) ஜார்ஜ் ஓடியன் |
| 9. ஈ)சரக்கு மற்றும்சேவை வரி | (ஈ) மும்பை |
| 10. (இ) மாவட்ட நீதிபதி | (அ) ரால்ப் நேடர் |
| 11.அ)தொழிற்சாலைக்குவெளியே | (அ) ஜீலை 2015 |
| 12.அ)கலை மற்றும் அறிவியல் | (இ) தயாரிப்பு |
| 13. (இ) தயாரிப்பு | ஈ) சரக்கு மற்றும் சேவை வரி |
| 14.(ஆ) வாடிக்கையாளர் | அ)தொழிற்சாலைக்குவெளியே |
| 15. (ஆ) வணிக வங்கி | அ) மோடம் |
| 16.ஆ) பரவலான/ஊடுருவலான | (அ) திட்டமிடல் |
| 17. (அ) ஜீலை 2015 | (ஆ) பரவலான/ ஊடுருவலான |
| 18. (ஈ) கரடி | (அ) வணிக இரசீது சந்தை |
| 19. (ஈ) ஜார்ஜ் ஓடியான் | (ஈ) 1992 |
| 20.(ஈ) புற வளங்கள் | (ஆ) வாடிக்கையாளர் |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. செயலூக்கமளித்தல்:** ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பது மற்றும் பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பது ஆகும

**22. OTCEI:** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.

**23. துணைத் தரகர்:** துணைத்தரகர் என்பவர் பங்கு மாற்றகத்தின் உறுப்பினரின் முகவராகச் செயல்படுபவர். தன்னை அமர்த்திய முதல்வருக்கு அதாவது உறுப்பினருக்கு வியாபாரத்தை பெற்றுத்தந்து அதற்காகக் கழிவு பெறுவார்.

**24. மனிதவள மேலாண்மை** என்பது நிர்வாக செயல்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் அவை ஒரு நிறுவனத்தின் மனிதக் கூறுகளை முதன்மையாகக் கருத்தில் கொண்டுள்ளது. **EFL ப்ரெச்.**

**25. தரப்படுத்துதல்** என்பது பொருட்களை இயல்பான தரத்தின் அடிப்படையில் பிரித்து அமைப்பது ஆகும்

**26. கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**27. மாவட்ட மன்றம்:** மாவட்ட அளவில் இயங்கும் நுகர்வோர் குறை தீர்வு மன்றம். மாவட்ட நீதிபதி தகுதியானவர் தலைவர். மற்ற துறைகளிலிருந்து இருவர்.

**28.வருநிகழ்வுசார் சரக்கு:-** இந்த சரக்கு விற்பனை எதிர்காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்ச்சியைப் பொறுத்தது.

**29. வாக்கெடுப்பு:** ஒரு முன்மொழிவுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ ஒருவர் தன் விருப்பத்தை உரிய முறையில் பதிவு செய்வதை வாக்கெடுப்பு எனலாம

**30. நீ ஒரு தொழில் முனைவராக இருந்தால் மூலதனத்தை எவ்வாறு திரட்டுவாய்:**
சொந்த நண்பர்கள் வட்டாரத்தில் இருந்தோ , உறவுமுறையின் உதவியாலோ, வங்கிகளிடமோ அல்லது நிதி நிறுமங்களிடமிருந்து கடனாகவோ, வினைமுதல் நிறுமங்களிடமிருந்து பங்கு வெளியீட்டின் மூலமோ, கடன் பத்திர வெளியீட்டின் மூலமோ தவணை கடன் மூலமோ வங்கிகளிடம் மாற்று சீட்டுகளை வட்டஞ் செய்தோ குறுகிய கால கடன் பெ றுவதன் மூலமோ , பந்தக் கடன் பெ றுவது வாயிலாக சொத்துக்கள் அடமானம் செய்வதன் மூலமோ , பத்திரங்கள் அடகு வைப்பதன் மூலமோ திரட்டுவேன்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?**
அறிவியல் கட்டை விரலின் விதி அல்ல
இணக்கம். சச்சரவின்மை
தனிமனிதத் தத்துவம் அல்ல ஒத்துழைப்பு
ஒவ்வொருவருக்கும் அவரவரது திறமைக்கும் செழிப்புக்குமுள்ள வளர்ச்சி

**32. வணிக இரசீதின் வகைகளை விவரி** தேவை மற்றும் பயன்பாட்டு இரசீதுகள், உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுகள் இரசீதுகள், இருப்பிட மற்றும் வழங்கல் இரசீதுகள்.

**33. பங்குச் சந்தையின் குறைபாடுகளை விவரி**
பங்கு பரிவர்த்தனையின் சீரான மற்றும் கட்டுப்பாடு இல்லாது. பங்குச் சந்தை உறுப்பினர்கள் மீது கட்டுபாடு இல்லாதது. ஒரு இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட கட்டணம் வசூலிக்க அனுமதித்தல்.

**34. சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைத் தருக.**
நிறுமம் தனது பெயரைத் திருத்த, இயக்குநர்களைப் பணியமர்த்த, நிறுமப் பங்கு முதலை மாற்றியமைக்க

**35. சந்தையிடுகையாளரின் பங்களிப்பு எவையேனும் மூன்றினைக் குறிப்பிடுக.** தூண்டுபவர், புதுமை புகுத்துநர், ஒருங்கிணைப்பாளர், செயல்பாட்டாளர்.

**36. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் பற்றி விவரி.** 5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
அவர்களில் ஒருவர் நீதித்துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
ஏனைய நபர்கள் பிற துறைகளில் இருக்க வேண்டும்.
இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும

**37. தாராளமயமாக்கல்** என்பது வணிக நடைமுறைகளில் உள்ள சட்டதிட்டங்களை அல்லது வழிகளை பொருளாதாரத்தில், சந்தை நல்ல நிலையை அடைய அரசாங்கம் கட்டுப்பாடுகளை தளர்த்துவது ஆகும்.

**38. மாற்றுமுறை ஆவணத்தின் அனுமானங்கள்**
ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் மறுபயன் கருதி வரையப்பட்டது. ஒவ்வொரு மாற்றுமுறை ஆவணமும் ஒப்புக் கொள்வதாகக் கருதப்படுகிறது. அதில் குறிக்கப்பட்டிருக்கும் நாளில் அது எழுதப்பட்டது. மாற்று முறையாவணம் அதன் முதிர்வு தேதிக்கு முன்பே மாற்றப்பட்டதாக

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

கொள்ளப்படுகிறது. இதனை வைத்திருப்பவர் முறைப்படி உடமை பெற்றராகக் கருதப்படுகிறது.

**39. மந்தமான தொழில் முனைவோர்:-** இவர்கள் தொழிலில் மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள. இவர்கள் யாரும் நுழைய விரும்பாத அல்லது பெரிய நிறுமங்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிறிய சந்ததையில் செயல்படுபவர்கள். அதாவது சிறிய குட்டடையில் பெரிய மீனாக அரசாள்பவர்கள். அந்த சிறு சந்ததையில் எவ்வித மாற்றமும் செய்யயாமல் அப்படியே இயங்குபவர்கள்.

**40. பணியமர்த்தல் முக்கியத்துவம்**

i) இது ஊழியர் ஒழுங்குணர்வை மேம்படுத்துகிறது
ii) பணியாளர் சுழற்சி குறைப்பதில் இது உதவுகிறது.
iii) இது மோதல் விகிதங்கள் அல்லது விரும்பப்படாத நிகழ்வுகளை குறைக்க உதவுகிறது
iv) இது பணியாளர்களுக்கும் வேலைக்கும் இடையில் பொருத்தமற்றவைகளை தவிர்க்கிறது.
v) இது நிறுவனத்தில் முன்னரே தீர்மமானிக்கப்பட்ட நோக்கங்களின்படி வேலை செய்ய பணியாளர்களுக்கு உதவுகிறது.
vi) இது ஒரு குறிப்பிட்ட தரவரிசை மற்றும் பொறுப்புகளை ஒரு தனிநபருக்கு ஒதுக்குவதாகும்.
எவை) குறுகிய கால ஊழியர்கள் பற்றாக் குறையைத் தவிர்க்க உதவுகிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும

**41.ஆ. நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் அளிப்பதில் உள்ள படிநிலைகள்** 1. நுகர்வோர் தனது பெயர், முகவரி, பொருள் வாங்கிய நாள் வாங்கிய பொருள் விவரம் குறித்து சட்டப்படி கொடுக்கப்பட வேண்டும் புகார் மனுவில் தெளிவாக குறிப்பிடபடவேண்டும்.
2. வாங்கிய பொருளில் உள்ள தரக்குறைபாடுகள் அல்லது அதிலிருந்து எழுந்த சிக்கல்களை தெளிவாக குறிப்பிட வேண்டும்.
3. புகாரின் பேரில் சமந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை நிறுவனம் இந்நநாள் வரை எடுத்த தீர்வு நடவடிக்கைகளை விவரிக்க வேண்டும்.
4. சம்மந்தப்பட்ட நிறுவனத்திலிருந்து எதிர்பபார்க்கப்படும் தீர்வு நடவடிக்கை.
5. சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குறைகளை தீர்க்க அளிக்கப்பட்ட கால அவகாசம்.
6. சட்டபடி அளிக்கப்பட்ட அறிவிப்புக்கு சம்மந்தப்பட்ட உற்பத்தி அல்லது விற்பனை செய்த நிறுவனம் முறைபடி பதிலளிக்கப்படாமல் இருக்கும் நிலையில், வருங்ககாலத்தில் எடுக்கப்பட இருக்கம் சட்டநடவடிக்கைகள் குறித்த தெளிவான நிலைப்பாடு, புகார் மனுவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**42.அ. தாராளமயமாக்கலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக?**

**நன்மைகள்:-** தாராளமயமாக்கலின் மூலம் வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கிறது.
அந்நிய செலவாணி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அந்நியச் செலவாணியின் இருப்பை அதிகப்படுத்துகிறது.
ஒரு நாட்டின் அளவுக்கு அதிகமான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் வழிவகை செய்கிறது.
ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகளை நீக்குவதன் மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறது.
உலகமயமாக்கலினால் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் வர்த்தக கடனின் அளவு குறைகிறது.

**குறைபாடுகள்:-**
தாராளமயமாக்கலினால் சிலதொழிற்சாலைகள் மூடப்படுவதால் வேலையில்லாப்பிரச்சனை அதிகரிக்கிறது.
உள்நாட்டு உற்பத்தி தொழில்கள் பாதிக்கிறது.
ஒரு நாடு மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை அதிகரிக்கிறது.
தாராளமயமாக்கலினால் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிகப் பயன் கிடைக்கிறது. வளரும் நாடுகளின் பொருளாதாரம் பின்தங்கியே இருக்கிறது.

**42.ஆ. பணச்சந்தையின் சிறப்பியல்புகளை விவரி**

**குறுகிய கால நிதிகள்:-** பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான சந்தை.

**முதிர்வு காலம்:-** ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்டது.

**பணமாக மாற்றுதல்:-**உடனடியான பணமாக மாற்றும் நிதிச் சொத்துக்களை மட்டுமே பரிமாற்றம் செய்யும்.

**முறையான இடமில்லை:-** பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறும். ஒரு முறையான இடமில்லை.

**மொத்த விற்பனை:-** பணச் சந்தையின் முக்கிய நிதி வழங்கும் மையம் வணிக வங்கியாகும். இது ஒரு மொத்த விற்பனை சந்தையாகும்.

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**43.அ. மனித வளத்தின் சிறப்புயல்புகள்**
உற்பத்தி செய்யும் ஓரே காரணியாக மனித வளம் திகழ்கிறது.
பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.
மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடியாது.
மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.
மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டவை.

**43.ஆ. நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் (KMP) என்பவர் யார்?** முதன்மை பிரதான நிர்வாக அதிகாரி, நிர்வாக இயக்குனர் அல்லது மேலாளர், நிறுமத்தில் செயலாளர், முழுநேர இயக்குனர், முதன்மை பிரதான நிதி அலுவலர், நிர்வாகத்திற்கு தேவையான மற்ற அலுவலர்.

**44.அ. சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி**
**பண்டமாற்று முறை:-** பண்டங்களுக்கு இணையாக பண்டங்களை மட்டுமே மாற்றிக் கொள்ளுதல்.
**உற்பத்தி சார்ந்தது:-** நுகர்வோரின் விருப்பங்களுக்கு மாறாக லாப நோக்கத்தோடு அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டது.
**விற்பனை சார்ந்தது:-** விற்பனையே ஒரு முற்போக்கு காரணியாக கருதப்படுகிறது.
**சந்தையிடுகை சார்ந்தது:-** விற்பனை செய்ய வாடிக்கையாளர்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.
**நுகர்வோர் சார்ந்தது:-** நுகர்வோருக்கு சுவை, விருப்பம், மனநிறைவு ஏற்படுத்துவதற்கு பொருள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

**44.ஆ. செல்தகு மேலெழுதுதலின் அடிப்படை கூறுகளை கூறுக.**
ஆவணத்தை மையால் எழுதுவதே நல்லது. பென்சிலால் எழுதினால் மோசடி நடக்க வாய்ப்புண்டு. மேலெழுதுபவர் தாம் இயல்பாக கையொப்பம் இடுவது போன்ற மேலெழுத வேண்டும். பெரிய எழுத்தில் கையொப்பம் இடக்கூடாது. ஆவணத்தின் முழுமதிப்பிற்கும் மேலெழுதப்படல் வேண்டும். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் தமது இடக்கை பெருவிரலை பதித்தால் போதும்.

**45.அ. பல்வேறு வகையான நிதிச்சந்தைகளை விவரி**
நிதிச்சந்தைகள் நிதிகோருதல் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.
**வகை:- கடன் சந்தை :-** கடன் கருவிகளை வணிகம் செய்வது (எகா) அரசு பத்திரங்கள்
**சமநிலை பங்குச் சந்தை:-** பங்குளை வணிகம் செய்வது (எகா) நிறும பங்குகள்
**முதிர்வு:- பணச்சந்தை:-** குறுகிய காலத்தில் முதிர்வு அடைவது (ஒரு ஆண்டுக்குள்) (எகா) கருவூலச்சீட்டு
**மூலதனச் சந்தை:-** நீண்ட காலத்தில் அடைவது (ஓராண்டுக்கு மேல்) (எகா) பங்குகள்
**வெளியீட்டுக்காலம்:- முதல்நிலைச் சந்தை :-** புதிய வெளியீடுகளுக்கான சந்தை
**இரண்டாம் நிலைச் சந்தை:-** ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை
**வழங்கல்:- உடனடிச் சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் உடனடியாக பெறுதல்.
**எதிர்கால சந்தை:-** ஆவணமும், ரொக்கமும் பின் ஒரு நாளில் பெறுதல்.
**அமைப்பு:- பரிமாற்றக வர்த்தகச் சந்தை:-** ஒழுங்கு நடைமுறைகளை கொண்ட அமைப்பு (பங்கு மாற்றகம்)
**உடனடி சந்தை:-** வழக்கமான நடைமுறைகளை கொண்டது.

**45.ஆ. பல்வேறு வகையான சோதனைகள் சுருக்கமாக விளக்குக.**
**தேர்வு சோதனை**

| **திறன் சோதனை** | **ஆளுமைச்சோதனை** |
|---|---|
| மனோபாவச் சோதனை | ஆர்வச் சோதனை |
| அடைவுச் சோதனை | ஆளுமைச் சோதனை |
| நுண்ணறிவுச் சோதனை | செயல் திறன் சோதனை |
| முடிவெடுக்கும்திறன் சோதனை | மனோபாவச்சோதனை |

**மனோபாவச் சோதனை:-** விண்ணப்பதாரரின் மனநிலையை அளவிடும் சோதனை ஆகும்.
**அடைவுச் சோதனை:-** விண்ணப்பதாரரின் அடைவுத் திறனை அளவிடும் சோதனையாகும். கல்வி நிறுவனங்கள் வழக்கமாக நடத்தப்படும் தேர்வுகள்.
**நுண்ணறிவுச்சோதனை:-** இதுமூளையின்சிந்திக்கும்ஆற்றல்,மனத்திறன்,நுண்ணறிவுபோன்றவற்றை சோதித்தல்.
**முடிவெடுக்கும் திறன் சோதனை:-** இச்சோதனை விண்ணப்பதாரர்களின் சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கும் திறனை சோதிக்க பயன்படுகிறது.
**ஆர்வச் சோதனை:-** தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் ஆர்வம் எத்துறையில் மிகுதியாக உள்ளதோ அத்துறையில் பணியை ஒதுக்குதல்.

**46.அ. அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை விளக்குக?**
**ஸ்டாட்டப் இந்தியா:-** தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது. 2016ல் துவங்கியது.
**இந்தியாவில் தயாரிப்புத் திட்டம்:-** இதன் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது. 2014ல் துவங்கியது
**அடல் புதுமை புகுத்தல் திட்டம்:-** பன்னாட்டு தரத்திற்கு இணையாக புதுமையான பொருட்களை வடிமைப்பது, ஊக்குவிப்பது, வளர்ப்பது ஆகும்.
**ஜன்தன் - ஆதார்- மொபைல் திட்டம்:-** அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

சேர வேண்டிய மானியத்தை நேராக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

**டிஜிட்டல் இந்தியா:-** அனைத்து அரசின் சேவைகளும் பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்படுகிறது.

**46.ஆ. விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள்**

மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.

முக்கியப் பிரச்சனைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.

அதிகாரப் பகிர்வினை எளிமையாக்கி, ஊக்குவித்து வளர்ச்சியடைய வழிவகுக்கிறது.

முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் எச்சரிக்கையாக இருக்க உதவுகிறது.

முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது.

**47.அ. தேசியப் பங்குச் சந்தை (NSE)** தேசிய பங்குச் சந்தை **நவம்பர் 1992ல்** அமைக்கப்பட்டது, இது தேசிய அளவில் திரை சார்ந்து இணைய வழியாக ஆணை பெறும் வியாபார அமைப்பாகும்.

**தேசிய பத்திர வைப்பங்கங்கள் வரையறுக்கப்பட்டது (NSDL)** இந்தியாவில் 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வைப்புச்சட்டத்ததை இயற்றி இந்த அமைப்பபை தோற்றுவித்தது. நவீன காலத்திற்கேற்றவாறு காகிதமில்லலாமல் பத்திரங்கள் தீர்வவை செய்வதன் மூலம் புதிய சகாப்தத்ததை தோற்றுவித்துள்ளது. 1996 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள் இந்தியாவில் தேசிய பத்திர வைப்பகங்கள் அமைப்பு தொடங்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் காகிதமில்லலா பத்திரங்கள் விற்பனையை தேசிய பங்கு பரிமாற்றகம் (NSE) தொடங்கியது. 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் நாள் முதல் காகிதமில்லலா பங்கு பரிவர்த்தனையை பம்பபாய் பங்குச் சந்தை தொடங்கியது.

**47.ஆ.தொழிலில் முனைவின் முக்கியத்துவம்:**

புதுமைபடைத்தல்

நாட்டின் மொத்த பொருள் உற்பத்திக்கு பங்களித்தல்

சீரான வட்டார வளர்ச்சி

ஏற்றுமதி முன்னேற்றம்

ஊள்ளார்ந்த வளப் பயன்பாடு

பொருளாதார சக்தி குவிதலை தவிர்த்தல்

வாழ்க்கை தர உயர்ச்சி

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

www.maduraicommerce.com



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com